5th November 1965]

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இடையிலே நிற்கக் கூடிய ஸ்டேஷன்களை நிர்ணயிப்பதில் நம்முடைய இலாகா எந்த அடிப்படையில் நிர்ணயிக்கிறது? தூரத்தை வைத்து நிர்ணயிக்கிறதா ? அல்லது மக்கள் அதிகமாக ஏறக்கூடிய பெரிய நகரத்தில் உள்ள இடத்தை நிர்ணயிக்கிறதா ? என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எக்ஸ்பிரஸ் பஸ்கள் 25 மைலுக்கு இடையில்தான் நிறுத்தவேண்டுமென்ற விதி இருக்கிறது. சென்னையிலிருந்து 250 மைல் தூரத்தில் ஒரு ஊர் இருக்குமானால் இடையிலே பத்து இடங்களில் நிற்க வேண்டியிருக்கும். அந்த பத்து இடங்களில் நிறுத்தும்போது எங்கே அதிகமாக வருமானம் வருமோ அந்த இடங்களில்தான் நிறுத்துகிறோம்.

திரு. ம. கமலநாதன் : எக்ஸ்பிரஸ் பஸ்களை ராணிப்பேட்டையில் நிறுத்த வேண்டுமென்று ரெப்ரசென்டேஷன் வந்திருப்பது போன்று வேறு இடங்களிலிருந்து ரெப்ரசென்டேஷன்கள் வந்திருக்கின்றனவா ? அவைகள் பரிசீலனையில் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்கு வேறு கேள்வி போடவேண்டும்.

விருத்தாசலம் முதலிய ஊர்கள் வழியாக எக்ஸ்பிரஸ் பஸ்

* 292 கேள்வி.—**திரு. இரா. நாராயணன்** : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) சென்னையிலிருந்தும், வேலூரிலிருந்தும் திருச்சிக்குச் செல்லும் சர்க்கார் துரித மோட்டார் வண்டிகளில் ஒன்றை உளுந்தூர் பேட்டை, விருத்தாசலம், திட்டக்குடி, தொழுதூர் வழியாக விடும் உத்தேசம் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. இரா. நாராயணன் : வேலூரிலிருந்து எக்ஸ்பிரஸ் பஸ்கள் உளுந்தூர்பேட்டை வரையிலும் போதிய பிரயாணிகள் இல்லாமல் பாதி காலியாக வருகிறது. அதை உளுந்தூர்பேட்டையிலிருந்து விருத்தாசலம், திட்டக்குடி, வழியாகக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுகிறபடி மாற்றி அமைத்தால் 14 மைல் கூட ஆகும். முப்பத்தி ஐந்து நிமிஷம் அதிகம் பிடிக்கும்.